## பொலிப்ரோ லங்கா (பிறைவேட்) லிமிட்டட் – 2017/2018

பொலிப்ரோ லங்கா (பிறைவேட்) லிமிட்டட்டின் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் மீதான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென பணிப்பாளர் சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கம்பனியின் தொடர்ந்தியங்கும் தன்மை

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான மாதிரிக் கட்டமைப்பின் பிரகாரம், நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான எடுகோள் பொருத்தமானதா என்பதை மதிப்பீடு செய்யும் போது நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்குப் பொறுப்பான தரப்பினர்கள் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் தொடர்பான பரந்தளவிலான காரணிகள், நிறுவன ரீதியான அலகுகளை மீளமைப்பது தொடர்பாக அறிவித்தல், அது தொடர்பாக நிகழ்வுகள் ஏற்படும் சாத்தியக்கூறுகள், வருமான மதிப்பீடுகள் அல்லது அரசாங்க நிதியளிப்பு, தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடருவதற்கான ஆற்றல் மற்றும் நிதியிடலை பதிலீடு செய்யும் சாத்தியமான வளங்கள் போன்ற விடயங்களை கருத்திற்கொள்ள வேண்டும்.

2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பொலிப்ரோ லங்கா (பிறைவேட்) லிமிட்டட்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு எடுகோளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் பின்வரும் விடயங்கள் தொடர்பில் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு நிச்சயமற்றிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(i) 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 30 இன் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள்

(ii) கம்பனியால் 2017 மார்ச் 31 வரை 69,630 லீற்றரும் அத்திகதியிலிருந்து 2017 யூன் 30 வரை 19,070 லீற்றரும் ஆக 88,700 லீற்றர் எரிந்த எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன் அவ் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதற்கான சந்தை காணப்படாததன் காரணமாக எரிந்த

எண்ணெய்யில் 46,841 லீற்றர்கள் மாத்திரம் லீற்றரொன்று ரூபா 40 விலைவீதத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தது.

(iii) உற்பத்தி செயன்முறையை தொடர முடியாதிருந்ததால் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி இலக்குகளை அடைந்துகொள்ள முடியாதிருந்ததுடன் ஒவ்வொரு உற்பத்தி அலகும் ரூபா 310 நட்டத்தை அடைந்திருந்தது.

(iv) 2018 மார்ச் 31 இல் உள்ளவாறு திறைசேரியால் செயற்திட்டத்திற்கு ரூபா 263.5 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும், அத்திகதியிலுள்ளவாறு செயற்திட்டத்தால் உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 1,892,540 தொகை மாத்திரமேயாகும். 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கம்பனியால் பெறப்பட்ட நட்டம் ரூபா 22.392,638 தொகையானதுடன் அத்திகதியில் உள்ளவாறான திரண்ட நட்டம் ரூபா 156,613,667 தொகையாகும். மேலும், 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 6,393,548 தொகையால் அதன் நடைமுறைச் சொத்துக்களை விஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(v) 2017 மே 23 இல் கம்பனியின் தலைவர் பதவி விலகியிருந்த போதிலும் புதிய தலைவரொருவர் 2018 ஆகஸ்ட் 31 வரையிலும் மீண்டும் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(vi) 4 பதவிநிலை உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக கம்பனியின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் பதவி விலகியிருந்த போதிலும் அப்பதவிகளிற்காக மீண்டும் எவரும் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(vii) 2018 மே 15 இல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பொலிப்ரோ லங்கா (பிறைவேட்) லிமிட்டட் கம்பனியின் மீளமைப்பு தொடர்பில் பின்வரும் விடயங்களிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

- சட்டமா அதிபரின் விடுவிப்பின் கீழ் செயற்பாட்டு உடன்படிக்கையை கைச்சாத்திடும் போது பங்கு மூலதனத்தில் 30 சதவீத உரித்தைக் கொண்டுள்ள கண்டுபிடிப்பாளர் மற்றும் ஆக்கவுரிமையாளர்களிற்கு பொலிப்ரோ தொழிற்சாலையின் செயற்பாட்டு உரிமைத்துவத்தை கையளிக்கக் கூடியவாறு பொலிப்ரோ லங்கா (பிறைவேட்) லிமிட்டட்டை மீளமைத்தல்.

- பொலிப்ரோ லங்கா (பிறைவேட்) லிமிட்டட்டின் உற்பத்தியாளர் தற்போதைய உற்பத்தி நடவடிக்கைகளை மாத்திரம் செயற்படுத்துவதற்கு உத்தேசித்திருப்பதால் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட பெறுமதி கணிப்பீட்டின் பிரகாரம் ரூபா 82,019,500 தொகையான மொத்த சொத்துக்களின் பெறுமதியை மீளச் செலுத்துவதற்கு 10 ஆண்டு சலுகைக் காலப்பகுதியொன்றை அவருக்கு அரசாங்கம் வழங்க வேண்டும். நிபுணத்துவக் குழுவால் அதன் பந்தியில் பரிந்துரைக்கப்பட்டவாறு அதற்கிணங்க செயற்படுவதற்காக பொலிப்ரோ லங்கா (பிறைவேட்) லிமிட்டட்டின் செயற்பாடுகள் மேற்குறிப்பிடப்பட்ட கண்டுபிடிப்பாளரிற்கு கையளிக்கப்பட வேண்டும்.

- மேற்படி பந்தியில் குறிப்பிடப்பட்ட சொத்துக்களின் மொத்தப் பெறுமதியை அரசாங்கத்திற்கு மீளக் கொடுப்பனவு செய்த பின்னரும் கண்டுபிடிப்பாளரால் வருடாந்தம் உழைக்கப்பட்ட இலாபத்தில் 10 சதவீதத்தை தொடர்ச்சியாக அரசாங்கத்திற்கு செலுத்துவதற்கு அவர் அறிவுறுத்தப்பட வேண்டும்.

- பொலிப்ரோ லங்கா (பிறைவேட்) லிமிட்டட்டிற்குத் தற்போது சொந்தமாகவுள்ள 11 ஏக்கர் காணியின் குத்தகையை அரசாங்கத்திற்கும் கண்டுபிடிப்பாளரிற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை திகதியிலிருந்து கண்டுபிடிப்பாளரிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு முதலீட்டுச் சபையை நெறிப்படுத்துதல், உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதியிலிருந்து 11 ஏக்கர் காணியின் குத்தகை அவரால் செலுத்தப்பட வேண்டும்.

- எதிர்கால மீளமைப்பு செயன்முறையை தொடருவதற்கு பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சின் செயலாளரிற்கு அதிகாரத்தை வழங்குதல் மற்றும் தற்போதைய பணிப்பாளர் சபையை செல்லுபடியாகாததாக கருத்தில் கொள்ளுதல்

- மீளமைப்பு செயன்முறை பூர்த்தி செய்யப்பட்டதிலிருந்து பொலிப்ரோ லங்கா (பிறைவேட்) லிமிட்டட்டில் தற்போது காணப்படுகின்ற ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் கூலிக் கொடுப்பனவிற்குத் தேவையான ரூபா 1 மில்லியன் தொகையை ஒதுக்கீடு செய்வதறகும் பொலிப்ரோ லங்கா (பிறைவேட்) லிமிட்டட்டால் முன்னர் ஆற்றப்பட்ட தொழிற்பாடுகள் தொடர்பான விலைப்பட்டியல்களின் தீர்ப்பனவிற்காக ரூபா 8.5 மில்லியன் தொகையை விடுவிப்பதற்கும் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரிற்கு பணிப்புரை விடுத்தல்.

- மேற்குறிப்பிடப்பட்ட பொலிப்ரோ லங்கா (பிறைவேட்) லிமிட்டட்டின் முன்மொழியப்பட்ட மீளமைப்பு பூர்த்தி செய்யப்படாததால் தொழிற்சாலையின் சொத்துக்கள் முடிவுறுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டு அதன் மூலம் கிடைத்த பணப்பெறுமதி திரண்ட நிதியத்திற்கு மாற்றப்படுதல்.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

---

(i) இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் 09 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்பானது கிரயம் அல்லது தேறிய நிகரப் பெறுமதி இரண்டில் குறைவானதில் அளவிடப்படல் வேண்டும். எனினும், 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் ரூபா 1,642,480 தொகையான தேறிய நிகரப் பெறுமதியையுடைய இறுதி இருப்பாக காணப்பட்ட 41,062 லீற்றர்கள் பொலிப்ரோ எண்ணெய் ரூபா 2,354,588 தொகையான அதன் கிரயத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்ததால் ஆண்டின் இறுதித் திகதியிலுள்ளவாறான நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 712,108 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் ஆண்டிற்கான நட்டம் நிதிக்கூற்றுக்களில் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ii) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்துக்களின் இற்றைப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் என்பன ஆகக் குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட்டிருக்காததால் ரூபா 3,188,978 கிரயமான 27 அத்தகைய உருப்படிகள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் தற்போதும் பயன்படுத்தப்பட்டுவருகின்றன. அதற்கிணங்க, இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) இலங்கை கணக்கீட்டு நியமம் 38 இன் 104 ஆம் பந்தியின் பிரகாரம், திடமான ஆயுட்காலத்துடனான கற்பனைச் சொத்துக்களிற்கான காலக்கழிவு காலப்பகுதி மற்றும் காலக்கழிவு முறை ஆகக் குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படாததால் ரூபா 284,864 பெறுமதியான கணனி மென்பொருள் முழுமையாக காலக்கழிவு செய்யப்பட்ட போதிலும் தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும் இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கம்பனியின் பெறுமானத்தேய்வு கொள்கையின் பிரகாரம், ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் காட்டப்பட்ட ரூபா 5,753,141 கிரயமான 4 சொத்து உருப்படிகளை வருடாந்தம் 10 சதவீதத்தில் ரூபா 575,313 தொகைக்கு பெறுமானத்தேய்விடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 20 சதவீதத்தில் ரூபா 1,150,627 தொகைக்கு பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேறிய நட்டம் ரூபா 575,313 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் அத்திகதியிலுள்ளவாறான நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 575,313 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

**(ஈ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கடன்களாக ரூபா 173,649,984 தொகை காட்டப்பட்டிருந்ததுடன் அதனை உறுதிப்படுத்துவதற்காக போதியளவு சான்றுகள் கம்பனியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட முடியாதிருந்தன.

(ii) அமைச்சிடமிருந்து பெறப்பட்ட மானியங்களாக நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 992,540 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும் உரிய பட்டியல் இறுதிக் கணக்குகளுடன் சேர்த்துச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க, இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் ஒன்றினை நான் தெரிவிக்கவில்லை.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வரும் விடயங்களைக் குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) இந்த அறிக்கையில் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் கூறப்பட்ட குறிப்பிடத்தக்க வரையறைகளிற்குட்பட்டு;

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் எனது அவதானிப்புக்களின் பிரகாரம் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் பேணப்படுகின்றன.

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன.

(இ) கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 220 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டம் | |
| (i) 167 ஆம் பிரிவு | ஒவ்வவொரு கம்பனியின் பணிப்பாளர் சபையும் ஐந்தொகை திகதியிலிருந்து 6 மாதங்களினுள் கம்பனியின் செயற்பாடுகள் மீது ஆண்டறிக்கை ஒன்றை தயாரிக்க வேண்டியதுடன் ஆண்டறிக்கையின் பிரதியொன்று பங்குதாரர்களின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தை நடாத்துவதற்காக நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு பதினைந்து வேலை நாட்களிற்கு முன்னர் கம்பனியின் ஒவ்வொரு பங்குதாரர்களிற்கும் அனுப்பப்பட வேண்டிய போதிலும் 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கை கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 220(1) ஆம் பிரிவு | கம்பனியின் கூறப்பட்ட மூலதனம் ரூபா 187,500,000 தொகையானதுடன் 2015/2016, 2016/2017 மற்றும் 2017/2018 ஆம் ஆண்டுகளில் மார்ச் 31 இல் உள்ளவாறான தேறிய சொத்துக்களின் பெறுமதி முறையே ரூபா 90,889,142, ரூபா 53,278,971 மற்றும் ரூபா 30,886,333 ஆக காணப்பட்டன. கம்பனியின் தேறிய சொத்துக்கள் அக்கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தில் அரைவாசியை விடக் குறைவாக காணப்படுகின்றதென ஏதாவது சந்தர்ப்பத்தில் அக்கம்பனியின் பணிப்பாளர் ஒருவரிற்கு தோன்றினால் அவ்விடயம் பணிப்பாளரிற்கு தெரிய வந்து 20 வேலை நாட்களினுள் சபையானது அதிவிசேட பொதுக் கூட்டத்திற்கு அழைப்பு |

| | | |
|---|---|---|
| | | விடுத்து அத்தகைய கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்ட திகதியிலிருந்து 40 வேலை நாட்களிற்குப் பிந்தாமல் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். எனினும், கம்பனி அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவு | சேவை வழங்குநரால் ஊழியர்களை தமது சேவையீலீடுபடுத்தும் ஒவ்வொரு மாதத்திற்காகவும் அவ் மாதத்தில் சேவை வழங்குநரின் ஊழியர் அத்தகையை சேவையில் உழைக்கின்ற மொத்த உழைப்பில் 03 சதவீத பங்களிப்புத் தொகை மாத்திரம் அடுத்த மாதத்தின் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் ஊழியர் தொடர்பாக நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் இக்கம்பனி 2017 பெப்ரவரி மாதம் முதல் 2017 மே மாதம் வரையான 04 மாத காலப்பகுதிக்காக நிர்ணயிக்கப்பட்ட திகதியில் உள்ளவாறு பங்களிப்புத் தொகையை செலுத்தியிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 156(7) மற்றும் 780 | கொடுப்பனவுகளை கையாளும் உத்தியோகத்தர் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது விவேகத்துடன் திட்டமிட்டு சிக்கனமாகவும் செயற்திறனாகவும் மேற்கொள்ளாததன் காரணமாக 02 சந்தர்ப்பங்களின் போது ரூபா 12,394 மற்றும் ரூபா 3,566 ஆக ரூபா 15,960 கூட்டுமொத்த தொகை தண்டப்பணமாக முறையே ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஈ) | 2009 பெப்ரவரி 19 இல் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கும் அகற்றப்படுகின்ற பிளாஸ்ரிக் கழிவுகளிலிருந்து எரிபொருளை உற்பத்தி செய்ய பதிப்புரிமையை பெற்ற முதலீட்டாளர்களுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட கூட்டுமுயற்சி உடன்படிக்கையின் 4.1 ஆம் பிரிவு மற்றும் பொலிப்ரோ லங்கா (பிறைவேட்) லிமிட்டட் கம்பனியின் அகவிதிகளின் 3.1(1)(i) ஆம் உறுப்புரிமை | கம்பனியால் வழங்கப்பட்ட மூலதனமானது பங்கொன்று ரூபா 10 விலைவீதத்திலான 18,750,000 சாதாரண பங்குகளை கொண்டிருந்த போதிலும் அதில் 10 பங்குகள் மாத்திரம் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்தன. |
| (உ) | 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | திறைசேரியால் விசேடமாக அங்கீகரிக்கப்பட்ட நலன்கள் மாத்திரம் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் அதன் ஊழியர்களிற்கு செலுத்தப்பட வேண்டும். அத்துடன் மேலதிக படிகள், ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் அல்லது வேறு ஏதாவது நிதி நலன்கள் தேவையான அங்கீகாரம் பெறப்படாமல் செலுத்தப்பட முடியாது. அதற்கு முரணாக 16 உத்தியோகத்தர்களிற்கு வெவ்வேறு படிகளாக ரூபா 873,361 தொகையும் பதில் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) உள்ளகக் |

கணக்காய்வாளராக பதில்கடமையாற்றுவதற்கு பதில்கடமைப் படியாக ரூபா 374,719 மொத்த தொகையும் 99 ஆம் இலக்க முகாமைத்துவ சபை தீர்மானத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தன.

| | | |
|---|---|---|
| (ஊ) | 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி/2/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | தொடர்பாடல் வசதிக்கு உரித்தற்ற 06 உத்தியோகத்தர்களிற்கு தொடர்பாடல் வசதிகளை வழங்குவதற்காக கம்பனியால் மீளாய்வாண்டின் போது ரூபா 25,041 தொகை செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் கம்பனியின் தொழிற்பாடு அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 35,174,148 தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 22,392,638 தேறிய நட்டத்தை விளைவித்திருந்ததால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 12,781,510 முன்னேற்றமொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் விற்பனை வருமானம் ரூபா 1,313,260 தொகையால் குறைவடைந்திருந்தமை மற்றும் முன்னைய ஆண்டின் ரூபா 57,467 தொகையான ஏனைய வருமானம் மீளாய்வாண்டில் இழக்கப்பட்டிருந்தமை, விற்பனைக் கிரயம், செயற்பாட்டுச் செலவினங்கள் மற்றும் நிதிச் செலவினங்கள் என்பன முறையே ரூபா 3,456,993, ரூபா 10,691,569 மற்றும் ரூபா 3,675 ஆல் குறைவடைந்தமை என்பன மேற்படி முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 03 ஆண்டு நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2014/2015 ஆம் ஆண்டின் ரூபா 15,613,789 தேறிய நட்டம் 2015/2016 ஆம் ஆண்டில் ரூபா 24,918,651 மற்றும் 2016/2017 ஆம் ஆண்டில் ரூபா 35,174,148 தேறிய நட்டங்கள் வரை வீழ்ச்சியடைந்திருந்ததுடன் அது 2017/2018 ஆம் ஆண்டின் போது ரூபா 22,392,638 தேறிய நட்டம் வரை அதிகரித்திருந்தது. கம்பனியின் நிதி விளைவுகளிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கம் செய்த போது 2014/2015, 2015/2016, 2016/2017 ஆம் ஆண்டுகள் மற்றும் மீளாய்வாண்டின் போது பங்களிப்புக்கள் முறையே ரூபா 9,760,637, ரூபா 14,523,826, ரூபா 19,668,621 மற்றும் ரூபா 10,384,796 தேறிய நட்டங்களாக காணப்பட்டன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாடும் மீளாய்வும்

2017 ஆம் ஆண்டிற்கான பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கழிவு பிளாஸ்ரிக்கை எரிபொருளிற்கு மாற்றுவதன் மூலம் சுற்றாடலிற்கு கழிவு பிளாஸ்ரிக் அகற்றல் ஆபத்துக்களை குறைத்தல், பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு ஏற்படுகின்ற கிரயத்தை குறைத்தல் மற்றும் அதன் மூலம் அந்நியச் செலாவணியை சேமித்தல், கண்டுபிடிப்பாளரின் கண்டுபிடிப்புக்களின் வணிக ரீதியான பெறுமதியை வழங்குவதன் மூலம் கண்டுபிடிப்பாளரை இனங்காணுதல், கண்டுபிடிப்பாளர் புலமைச் சொத்து உரிமைகளை மதிப்பீடு செய்து அதனை தேசிய சொத்திற்கு மாற்றுதல் மற்றும் புத்தாக்க சிந்தனை மற்றும் கண்டுபிடிப்புக்களில் மேலும் ஈடுபடுகின்ற இளைய சமுதாயத்தினரை பெறுவதற்கு அவர்களிற்கு இப்புதிய மாதிரியை அறிமுகப்படுத்துதல், கழிவு பிளாஸ்ரிக் சேகரிப்பாளர்களாக சுய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல், அதற்கு மேலதிகமாக

எரிபொருளை உற்பத்திசெய்கின்ற தொழிற்சாலையால் உருவாக்கப்படுகின்ற வேலைவாய்ப்புக்களினை வழிநடாத்துதல், ஏனைய துணை உற்பத்திப்பொருட்களை உற்பத்தி செய்யும் சாத்தியத்தன்மை தொடர்பில் மேலதிக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆய்வுகளை மேற்கொள்ளுதல், முச்சக்கர வண்டிகளிற்கான சிக்கனமான எரிபொருளாக பயன்படுத்துவதற்கு பிளாஸ்ரிக்கை எரிபொருளிற்கு மாற்றும் செயன்முறை ஊடாக உற்பத்தி செய்யப்படுகின்ற எரிபொருளை முன்னேற்றுதல் மற்றும் உலக அரங்கில் இத்தொழில்நுட்ப ரீதியான அதிசிறந்த கண்டுபிடிப்பை விரிவாக்குதல் மற்றும் சந்தைப்படுத்துதல் என்பவற்றை கம்பனியின் நோக்கங்கள் உள்ளடக்குகின்றன.

கம்பனியின் நோக்கங்களை அடைந்துகொள்வதில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு பிளாஸ்ரிக் கழிவுகள் மூலம் எரிபொருள் உற்பத்திக்காக செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது கிரய நலன் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படாதமை, உற்பத்திப் பொருட்களிற்கான சந்தை இனங்காணப்படாமை, ஆரம்பச் செயற்திட்டத்தை பகுதியளவிலான வணிகச் செயற்திட்டமாக அமுல்படுத்தும் போது இனங்காணப்படுகின்ற பிரச்சினைகள் மற்றும் குறுக்கீடுகளை தடுப்பதற்காக திட்டங்களை தயாரித்து அமுல்படுத்தாமை, தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் போதியளவில் காணப்படாமை, உரிய நேரத்தில் நிதிகள் கிடைக்காமை மற்றும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதில் உற்பத்தி முகாமைத்துவம் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்படுதல் போன்ற காரணங்களினால் செயற்திட்ட நோக்கங்கள் அடையப்படாது மிகவும் திருப்தியற்ற செயற்திட்டமாக வந்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(i) கழிவு பிளாஸ்ரிக்கை எரிபொருளாக மாற்றுவதற்கான செயற்திட்டம் தொடர்பான சாத்தியவள ஆய்வுக் கட்டத்தின் மூலம் கிரய நலன்கள் சரியாக இனங்காணப்பட்டிருக்காததால் லீற்றரொன்றிற்கான விற்பனை விலை ரூபா 40 ஆக இருந்த போதிலும் உற்பத்திக் கிரயம் ரூபா 350 ஆக இருந்தது.

(ii) உற்பத்தி செய்யப்பட்ட எரிந்த எரிபொருளானது கொதிக்க வைப்பதற்காக எரிகின்ற எரிபொருளாக மாத்திரம் பயன்படுத்தப்பட முடியும் என இனங்காணப்பட்டிருந்த போதிலும் எரிபொருள் சந்தையிலுள்ள பலமான போட்டி, பதீலீட்டு எரிபொருளின் பயன்பாடு மற்றும் பதிலீட்டு எரிபொருளின் (மண்ணெண்ணை) போட்டி விலை காணப்படுதல் போன்றன தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்காததால் உற்பத்தி செய்யப்பட்ட எரிந்த எண்ணெயின் விற்பனை முற்றிலும் தோல்வியடைந்திருந்தது. ஆகையால், கம்பனியால் உற்பத்தி செய்யப்பட்ட 88,700 லீற்றர் எரிந்த எண்ணெய்யில் 46,841 லீற்றர் பணிப்பாளர் சபையின் விசேட சபை பத்திரத்தின் மூலம் தனியார் நிறுவனமொன்றிற்கு லீற்றரொன்று ரூபா 40 படி விற்பனை செய்யப்பட்டிருந்தது.

(iii) ஆரம்பச் செயற்திட்டங்களிலிருந்து அடையப்பட்ட விளைவுகளின் பிரகாரம், கழிவு பிளாஸ்ரிக்கை எரிபொருளிற்கு மாற்றுதல் செயன்முறை தொழில்நுட்ப ரீதியாகவும், சுற்றாடல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததால் தற்போதுள்ள இயலளவை விட 10 மடங்குகள் அதிகமாக பகுதியளிவில் வணிக ரீதியான இலக்கு எல்லைகளை (Semi-commercial terminus) உருவாக்கி அமுல்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் இச்செயற்திட்டத்தை அமுல்படுத்துவதில் ஏற்படும் தடைகள் மற்றும் பிரச்சினைகளை இனங்காண்பதன் மூலம் தேவையான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) பகுதியளவில் வணிக ரீதியான இலக்கு எல்லைகளிற்கு இதனை மாற்றியதன் பின்னரும் இலக்கு எல்லைகளிற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதற்கு முன்னரே திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

(v) இச்செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது, ஆரம்பத்தில் முறைமைக்கு பிளாஸ்ரிக்குகளை உள்ளீடு செய்வதற்காக குறித்துரைக்கப்பட்ட நடைமுறையொன்று காணப்படாததுடன் ஆரம்பச் செயற்திட்டங்களிலிருந்து இன்றுவரை ஏறத்தாழ 05 முறைகள் பரீட்சிக்கப்பட்டிருந்தது. தற்போது பயன்படுத்திய எண்ணெய்யுடன் கலப்பதன் மூலம் முறைமைக்கு பிளாஸ்ரிக் உள்ளீடு செய்யப்படுவதுடன் இச்செயன்முறையில் பயன்படுத்தப்பட்ட எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்ட எரிந்த எண்ணெய்யின் அளவை விட உயர்ந்தளவில் உள்ளீடுகளாக முறைமைக்கு சேர்க்கப்பட்டிருந்தது.

கம்பனி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 2018 மார்ச் 31 வரை 88,700 லீற்றர் எரிந்த எண்ணெய்யை கம்பனி உற்பத்தி செய்திருந்ததுடன் இக்காலப்பகுதியின் போது 95,200 லீற்றர் பயன்படுத்தப்பட்ட எண்ணெய் பிளாஸ்ரிக்குகளுடன் நேரடியான மற்றும் மறைமுகமான உள்ளீடுகளாக பயன்படுத்தப்பட்டன. அதற்கிணங்க, 1.07 லீற்றர் பயன்படுத்தப்பட்ட எண்ணெய் ஒரு லீற்றர் எரிந்த எண்ணெய் உற்பத்திக்காக உள்ளீடுகளாக பயன்படுத்தப்பட்டிருந்தன.

(vi) பொலிப்ரோ லங்கா (பிறைவேட்) லிமிட்டட் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறு உற்பத்தி நோக்கங்களிற்கு பயன்படுத்தப்பட முடியாதிருந்த மணல்களுடன் கலந்திருந்த 3,494 கிலோகிராம் பிளாஸ்ரிக் பவுடர், உற்பத்திச் செயன்முறை ஊடாக அகற்றப்பட்ட 17,350 லீற்றர் திரவக் கழிவு மற்றும் திண்மக் கழிவுகளை சுற்றாடலிற்கு அகற்றுவதற்கு நன்மையளிக்கும் முறையொன்று காணப்படாததன் காரணமாக கம்பனியின் வளாகத்திலுள்ள தாங்கிகள் மற்றும் கொள்கலன்களிலுள்ள 2,000 கிலோகிராம் திண்மக்கழிவுகள் என்பவற்றை களஞ்சியப்படுத்தியிருந்தது. மேலும், அக்கழிவுகளை நட்புரீதியான சுற்றாடல் ரீதியாகவும் சட்டரீதியாகவும் அகற்றுவதற்காக கம்பனியால் முறையான நடைமுறையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 4.2 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பிளாஸ்ரிக் கழிவுகளை எரிபொருளிற்கு மாற்றுவதன் ஊடாக ஆபத்தான முறையில் அகற்றப்படுகின்ற பிளாஸ்ரிக் காரணமாக ஏற்படுகின்ற சுற்றாடல் ரீதியான இடரை குறைக்கும் நோக்கில் 2009 ஆகஸ்ட் 19 இல் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட பொலிப்ரோ லங்கா (பிறைவேட்) லிமிட்டட் 2010 ஒக்தோபர் 04 தொடக்கமும் 2013 பெப்ரவரி 06 தொடக்கமும் முறையே மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு மற்றும் தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு என்பவற்றின் அதிகார எல்லையின் கீழ் காணப்பட்டது. 2015 செப்தெம்பர் 21 தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதிவரை இது பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் அதிகார எல்லையின் கீழ் காணப்பட்டது. மேலும், வெவ்வேறு அமைச்சுக்களிற்கிடையே கம்பனியின் தொழிற்பாடுகள் மாற்றப்படுவதன் காரணமாக கம்பனியின் செயலாற்றல் பாதகமாக பாதிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.3 ஆளணி நிர்வாகம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட கம்பனியின் பதவியணி மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கணக்குப் புத்தகங்களைப் பேணுதல்

நிதிப்பிரமாணம் 234(2) இன் பிரகாரம் மாதிரிப்படிவம் பொது 58 இல் காசுப் புத்தகம் மற்றும் மீளாய்வாண்டிற்காக பயன்படுத்தப்பட்ட புத்தகங்கள் மற்றும் பேரேட்டுக் கணக்குகள் முறையாக பேணப்பட்டிருக்கவில்லை.

### 5.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களுக்குள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 81 நாட்கள் தாமதித்து 2018 ஆகஸட் 21 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 05(2) ஆம் பிரிவின் பிரகாரம் வணிகத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அடுத்து வரும் நிதியாண்டில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட வர்த்தக நடவடிக்கைகளை உள்ளடக்கி செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மனித வளங்கள் அபிவிருத்தி திட்டம் மற்றும் கடன் மீள்கொடுப்பனவு திட்டம் என்பவற்றை உள்ளடக்கும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்காக கம்பனியின் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்காததால் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனினும் மீளாய்வாண்டின் போது பதில் உள்ளகக் கணக்காய்வாளரிற்கு பதிற்கடமை படிகளாக ரூபா 150,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இப் படி திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன் முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையிலும் இது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

### 5.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் மூன்று மாதங்களிற்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை..

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்கு காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) பதிவேடுகளின் கட்டுப்பாடு | மூல ஆவணங்கள் மற்றும் நாளாந்த ஏடுகள் முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | கணக்கீடு | குறித்த சில இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை. |
| (இ) | கொடுப்பனவுக் கட்டுப்பாடு | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய அனுமதி பெறப்படாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுதல். |
| (ஈ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | நிலையான சொத்துக்கள் பதிவேடு முறையாக பேணப்படாமை மற்றும் குறைப்பயன்பாட்டு சொத்துக்கள் காணப்படுதல். |
| (ஈ) | மனித வளங்கள் முகாமைத்துவம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி காணப்படாமை. |